**தலைப்பு – 05 அமைச்சரவை அலுவலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அமைச்சரவை அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சரவை அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டினுள் அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 06 மோட்டார் வாகனங்களின் ரூபா 51,340,000 கூட்டுப்பெறுமதியானது 2018 யூலை 16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 05 (ஆ) இன் கீழான (எ) பிரிவு மற்றும் 2019 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய SA/AS/AA/Circular ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் குத்தகைச் சொத்துக்களை அறிக்கையிடும் போது சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். கைத்தவறுதலின் காரணமான குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 06 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. எதிர்காலத்தில் குறித்த பெறுமதியை சரியாக கணக்கு வைப்பதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 51,340,000 பெறுமதியான குத்தகைச் சொத்துக்கள் (வாகனங்கள்) கொள்வனவு செய்தல், நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 6 மாதிரியின் கீழான நிதியல்லாத சொத்துக்களில் ஆண்டிற்கான கொள்வனவாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் கீழ் ரூபா 3,086,628 ஆன பெறுமதி மாத்திரம் அறிக்கையிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் குத்தகைச் சொத்துக்களை அறிக்கையிடும் போது சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். தவறுதலான இதுவரை செலுத்தப்பட்ட குத்தகைத் தவணைகளின் பெறுமதி மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104 | 2018 செப்தம்பர் 13 மற்றும் ஒக்தோபர் 30 ஆந் திகதி இடம்பெற்றிருந்த 02 விபத்துகள் காரணமாக ஏற்பட்டீருந்த ரூபா 52,369 ஆன நட்டங்கள் மற்றும் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த 05 வாகன விபத்துகளின் ரூபா 386,092 கூட்டுத்தொகையான நட்டங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் 2020 யூன் 25 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | தொலைந்து போதல் / சேதங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அறிக்கைகளை தயாரித்து அதன் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த நட்டத்தினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது டன், அது தொடர்பில் இது வரையிலும் திட்டவட்டமான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. 05 வாகன விபத்துகளினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணை அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் கண்காய்விற்கு முன்வைக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகள் மற்றும் தேறிய நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 17,500,000 கூட்டுத்தொகையானது 1102 ஆம் இலக்க மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 2001, 2103 ஆம் இலக்க மூலதன் செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட செலவினமொன்று கணக்கு வைக்கப்பட்டிராததுடன், ஆண்டின் இறுதியில் அந்த 03 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டிலான சேமிப்பானது 100 சதவீதமாகும். | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செயற்பட்டு சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணம் 127(4) மற்றும் 127(5) இன் பிரகாரம் திணைக்களத்தின் மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலவினம் ஆகியவற்றுக்கிடையில் ஏற்படும் கருத்திற்கொள்ளக்கூடிய வேறுபாடுகள் பாராதூரமான விசாரணை செய்யப்படுகின்றமையை கவனத்திற்கொள்ளப்படும் வகையில் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் மாதம் நாட்டில் ஏற்பட்ட எதிர்பாராத சம்பவத்தினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தடைகளை அடிப்படையாக கொண்டு வெளியிடப்பட்ட 04/2019 ஆம் இலக்க 2019.06.17 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க செலவினத்தை மேற்கொள்ளும் போது பின்பற்றப்பட்ட செலவினக் கட்டுப்பாட்டு முறைமை காரணமாக செலவினத்தில் சேமிப்பொன்று உருவாகியிருந்தது. |
| (ஆ) 2018 மே 16 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், சிராவஸ்தி கட்டிடத் தொகுதி அமைந்துள்ள வளாகத்தின் ஒரு பகுதியினுள் அலுவலகத்தினை தாபிப்பதற்காக மீளாய்வாண்டினுள் 02 | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செயற்பட்டு சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணம் 127(4) மற்றும் 127(5) இன் பிரகாரம் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் செலவினம விடயங்களுக்காக மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 27,820,000 ஆன தேறிய நிதியேற்பாட்டின் ரூபா 26,450,274 ஆன நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், இது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 61 முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினை கொண்டிருந்தது. | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலவினம் ஆகியவற்றுக்கிடையில் ஏற்படும் கருத்திற்கொள்ளக்கூடிய வேறுபாடுகள் பாராதூரமான விசாரணை செய்யப்படுகின்றமையை கவனத்திற்கொள்ளப்படும் வகையில் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (இ) | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அலுவலக வளாகத்தில் மாற்றங்கள் இடம்பெற்றிராததுடன், அவ்வாறு அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற பயன்படுத்தப்படாத இரண்டு கட்டிடங்களக்காக தர அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு, பாதுகாப்பு கடமைகள், நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்கு 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,423,486 ஆகும். | செலவினங்கள் உரிய முறையில் திட்டமிடப்பட்டு சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சரவை இலுவலகத்திற்காக தற்காலிகதமாக ஒதுக்கப்பட்டிருந்த சிரசஸ்தி கட்டிடங்கள் சில உள்ளடங்களாக அவற்றில் பொருத்தப்பட்டிருந்த உபகரணங்களின் பயன்பாட்டிற்காக சிவில் பாதுகாப்பு சேவையின் பாதுகாப்பினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,118,900 தொகையும், அந்த திணைக்களத்தின் ஒட்டுமொத்த நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களின் பெறுமதியில் 5% ஆன ரூபா 188,600 தொகையும் கட்டிடத்தின் தர அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 115,986 தொகையுமாக ரூபா 2,423,486 தொகை அந்த காலப்பகுதியினுள் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2020 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 25 | 17 | 08 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 10 | 09 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 38 | 28 | 10 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 40 | 29 | 11 |
| (v) | ஏனைய – (அமைய / ஒப்பந்த / தற்காலிக) | 06 | 03 | 03 |
| | | **119** | **86** | **33** |